ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/46 - 2019 ඔක්තෝබර් මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.03

*2143/46 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: கொ/ப்ரா/ஒஅ/3/77/PS.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், (பிரிவு இல. 20, கொழும்பு மாநகர சபை எல்லையினுள்) கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.02.05 ஆந் திகதிய கொ. 9782 ஆம் இலக்க, ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட 0.2054 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரம் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. *01***

வரி மதிப்பீட்டு இல. : 17 (ஒரு பகுதி), 175/1 மற்றும் 178/1, சனாதிபதி மாவத்தை; விபரம் : 06 மாடி கொண்ட நிரந்தரமான கட்டடம் காணப்படுகின்றது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : இல. 37, யோர்க் வீதி, கொழும்பு 01 எனும் விலாசத்தில் அமைந்துள்ள ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கி; விஸ்தீரணம் : 0.2054 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கொழும்பு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. பி. விக்கிரமசிங்க,<br>
பிரதேச செயலாளர்,<br>
கொழும்பு.

பிரதேச செயலகம்,<br>
கொழும்பு,<br>
2019, செத்தெம்பர் 05.

*10 - 625*



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: CHI/LND.1/AC/4/14.
L/03J/95/PC/231.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில், ஆனைவிழுந்தன்பத்து சிறு பிரிவில், இல. 578, பிட்டிப்பனை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 8 ஆம் வட்டாரம், சிலாபம், கொழும்பு வீதி (சிலாப நகரசபை எல்லைக்குட்பட்ட) என்ற ஊரில் அமைந்திருக்கும், புத்தளம் நில அளவை அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 4849 உம் 2011.09.30 ஆந் திகதியுமுடைய ஆரம்ப வரை படத்தில் கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : கலிகால; விபரம் : பாதை; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : வர்ணகுலசூரிய மேரி மாலனி பர்னாந்து மற்றும் ரெஜினா ஜசின்தா, கொழும்பு வீதி, சிலாபம்; விஸ்தீரணம் : 0.0132 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**

காணியின் பெயர் : கலிகால; விபரம் : பாதை; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : மிஹிந்துகுலசூரிய எம்மானுவேல் நிமல் பெரேரா, கொழும்பு வீதி, சிலாபம்; விஸ்தீரணம் : 0.0090 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 03**

காணியின் பெயர் : கலிகால; விபரம் : பாதை; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : மிஹிந்துகுலசூரிய என்ட்ரு ஜயன்தா ஹிலரியன் பர்னாந்து, கொழும்பு வீதி, சிலாபம்; விஸ்தீரணம் : 0.0090 ஹெக்டயார்.

**04. துண்டு இல. 04**

காணியின் பெயர் : கலிகால; விபரம் : பாதை; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : ஏ. செல்டன் ஆனந்த பொன்சேகா, கொழும்பு வீதி, சிலாபம்; விஸ்தீரணம் : 0.0050 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சிலாபம் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. எம். ஏ. கே. திசாநாயக,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2019, செத்தெம்பர் 30.

10 - 626

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.